NST Campus

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 09 | சைவநெறி | 2 மணித்தியாலம் |
| --- | --- | --- |

சுட்டிலக்கம் : ……………………. புள்ளிகள்

**1 – 20 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைத் தேர்வு செய்க**

1. சேங்கணானும் பிரமுனும் தம்முள்ளே எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார் என இறைவனைப் போற்றிப் பாடியவர் யார்
   01. சம்பந்தர் 02. திருநாவுக்கரசர்
   03. திருமூலர் 04. சுந்தரர்

2. பஞ்சாட்சர பதிகம் எத்தனையாம் திருமுறையில் அடங்குகின்றது
   01. முதலாம் திருமுறை 02. இரண்டாம் திருமுறை
   03. நான்காம் திருமுறை 04. மூன்றாம் திருமுறை

3. தென்புலத்தார் எனப்படுவோர்
   01. பிதிர்கள் 02. பெற்றோர்
   03. மூதாதையர் 04. முதியோர்

4. தமிழாகமம் எனப் போற்றப்படும் நூல்
   01. தேவாரம் 02. திருவாசகம்
   03. திருமந்திரம் 04. பெரிய புராணம்

5. அன்னதானக்கந்தன் எழுந்தருளியுள்ள இடம்
   01. மாவிட்டபுரம் 02. செல்வச்சந்நிதி
   03. நல்லூர் 04. கதிர்காமம்

6. மகாபாரதத்தில் சகிப்புத்தன்மைகள் சிகரமாக விளங்குபவர்
   01. தருமர் 02. வீமன்
   03. அருச்சுனன் 04. அரிச்சந்திரன்

7. இறைவன் காலனை காலால் உதைத்து யாருடைய உயிரை பாதுகாத்தார்
   01. சம்பந்தர் 02. மார்க்கண்டேயர்
   03. கண்ணப்பர் 04. சுந்தரர்

8. குலசேகர ஆழ்வார் உதித்த குலம்
   01. சோழர்குலம் 02. பாண்டியர்குலம்
   03. சேரகுலம் 04. பிராமணர் குலம்

9. கட கசங்கிராந்தி என அழைக்கப்படும் பண்டிகை
   01. தைப்பொங்கல் 02. சித்திரை
   03. தீபாவளி 04. ஆடிப்பிறப்பு

10. சகமலம் எனப்படுவது
    01. ஆணவம் 02. கன்மம்
    03. மாயை 04. பதி

11. அர்த்த நாரீஸ்வர பெற்றினை பெற்றுக்கொள்ள உமா தேவியார் அனுஸ்டித்த விரதம்
    01. கந்த சஷ்டி 02. பிள்ளையார் விரதம்
    03. கேதாரி கௌரி விரதம் 04. வரலட்சுமி விரதம்

12. “வரிவளைக் கைமடமானி” என அழைக்கப் பெற்ற பெண் அடியார்?

01. திலகவதியார் 02. மங்கையற்கரசியார்
03. இசைஞானியார் 04. காரைக்காலம்மையார்

13. "ஈழத்து சிதம்பரம்" என அழைக்கப்படும் ஆலயம் எது?
01. மாமாங்கேஸ்வரம் 02. தாந்தாமலை
03. காரைநகர் சிவனாலயம் 04. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

14. சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலம்
01. வாரம் 02. திதி 03. நட்சத்திரம் 04. யோகம்

15. "நையாத மனத்தினை.........." எனும் திருவிசைப்பாடல் யாரால் பாடப்பட்டது?
01. சேந்தனார் 02. திருமாளிகைத்தேவர்
03. கருவூர்த்தேவர் 04. சேதிராயர்

16. தங்கத் தாத்தா எனப் போற்றப்படுபவர்
01. மகாத்மா காந்தி 02. நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
03. சின்னத்தம்பி புலவர் 04. சுவாமி விபுலானந்தர்

17. சோழர் ஆட்சி காலத்தில் பதவியாவில் அமைந்த சிவாலயம்
01. உத்தம சோழேஸ்வரம் 02. இரவிகுல மாணிக்க ஈஸ்வரன்ம்
03. பண்டித சோலேஸ்வரர் 04. திருவிரா மீஸ்வரம்

18. ஐயனார் வழிபாட்டிலே மகர ஜோதி தரிசனம் சிறப்பாக இடம் பெறுவது?
01. தாந்தாமலை 02. ஏழுமலை
03. சபரிமலை 04. சிவனொளி பாதமலை

19. புத்தபெருமானின் பிறப்பு ஞானோதயம், பரிநிர்வாணம் ஆகிய மூன்று சம்பவங்களையும் நினைவு கூறும் பண்டிகை
01. பொசன் 02. எசல 03. சித்திரை 03. வெசாக்

20. இறைவனை ஆண்டானாகவும் தன்னை அடிமையாகவும் பாவித்து இறைவனை வழிபடும் மார்க்கம்
01. தாச மார்க்கம் 02. சன்மார்க்கம் 03. சற்புத்திர மார்க்கம் 04. சக மார்க்கம்

## பகுதி - 02

- முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக

1. 01. "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" எனக் கூறியவர் யார்?
02. தல யாத்திரை மேற்கொள்ளப்படும் இந்திய திருத்தலங்கள் இரண்டு தருக?
03. திராவிட வேதமென அழைக்கப்படும் நூல் எது?
04. பிதிர் வழிபாடுகள் இரண்டு தருக?
05. அருணகிரிநாதருக்கு திருப்புகழ் பாட முருகப்பெருமான் எடுத்துக் கொடுத்த அடி யாது
06. திருத்தொண்டர் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய நூல்களை எழுதியோர் யாவர்?
07. திருக்கார்த்திகை விளக்கீட்டு விழா மிகச் சிறப்பாக இடம் பெறும் தலம் எது?
08. துணை மலம் என அழைக்கப்படுவது?
09. தாருகாவனத்து முனிவர்களின் ஆணவத்தை அடக்க தோற்றம் பெற்றவர்?
10. சரியைத் தொண்டுகள் நான்கு தருக?

2. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக? பாடியவர், தலம் என்பவற்றை குறிப்பிடுக

01. இல்லக விளக்கது..........
02. சொல்லாண்ட சுருதிப்பொருள்............
03. ஐந்து பேரறிவும்............
04. ஏழிசையாய் இசைப்பயனாய்..........

3. ஒழுக்கம் விழுப்பம் தரும்

01. அடிப்படை விழுமியங்கள் இரண்டு தருக
02. சகிப்புத்தன்மை பற்றி வள்ளுவர் கூறும் குரள் ஒன்று தருக
03. கூட்டுப்பொறுப்புடன் செயல்படுவதற்கு வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகள் மூன்று தருக
04. சமூக நல்லிணக்கம் உறுவாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் யாவை

4. வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்.........
01. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் முட்பொருள்களும் எவை?
02. ஆன்மாக்களின் இறுதி இலட்சியம் யாது?
03. ஆணவ மலத்தின் இயல்புகள் 3 தருக?
04. கன்மம் எத்தனை வகைப்படும்? அவை எவை?

5. “மனித வாழ்வை மேம்படுத்துவன விரதங்களும் பண்டிகைகளும்
01. விரதம் என்பதன் வரைவிலக்கணம் யாது?
02. சைவர்கள் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டு தருக
03. விரதங்கள் இவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன? உதாரணம் தருக?
04. கேதார கௌரி விரதம் அனுஷ்டிக்கும் காலப்பகுதியினை குறிப்பிடுக? அவ் விரதத்தை அனுஷ்டிக்கும் நியதிகளை குறிப்பிடுக?

6. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக?
01 நாட்டார் வழிபாடு
02. மங்கையரக்கரசியார்
03. ஆடிப்பிறப்பு
04. பஞ்சாங்கம்
05. சைவநாற்பாதங்கள்